செய்தி வெளியீடு எண்: 106 நாள்: 12.02.2018

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் நிலவும் அமைதியான சட்ட ஒழுங்கு சூழ்நிலை, தடையற்ற மின்சாரம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வலுவான கட்டமைப்பு, பல சர்வதேச விமான நிலையங்கள், பன்முக துறைமுகங்கள் மற்றும் திறன் மிக்க மனித ஆற்றல் ஆகியவை தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக விளங்கி வருகின்றன. இவை உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு முதலீட்டாளர்களை தொடர்ந்து ஈர்த்து வருகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் கடந்த 2015ஆம் ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு அனைத்து தரப்பினரும் பாராட்டும் வகையில் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் இந்தியா மற்றும் வெளி நாடுகளைச் சேர்ந்த 8000க்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள், தலைமை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பல நாடுகள் பங்கேற்ற இம்மாநாட்டில், 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகப் பங்கேற்று, ரூ.2.42 லட்சம் கோடி மதிப்பிலான 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இதில் இதுவரை, ரூ.62,738 கோடி மதிப்பிலான 61 நிறுவனங்களின் முதலீடுகள் பல்வேறு கட்டங்களில் செயலாக்கத்தில் உள்ளன. இதன் மூலம், 96,341 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. முதல் மாநாட்டிற்கு கிடைத்த நல்ல வரவேற்பினைத் தொடர்ந்து தற்போது, இரண்டாவது சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை மாண்புமிகு அம்மாவின் அரசு சென்னையில் 2019 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 மற்றும் 24 தேதிகளில் மிகச் சிறப்பாக நடத்த உள்ளது.

இம்மாநாட்டை நடத்துவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இம்மாநாட்டை சிறப்பாக நடத்தி தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து கொண்டு செல்ல அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள், தொழில் கூட்டமைப்புகள், வெளிநாட்டு தொழில் கூட்டமைப்புகள், தூதரகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சி நண்பர்கள் அனைவரும் ஒத்துழைப்பை நல்க அன்போடு அழைக்கின்றோம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**